

படித்த மகளிர் திட்டம், மிருசுவிலைச் சேர்ந்த

அமரர்

# சரவணை தாமோதரம்பிள்ளை

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

# 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



படித்த மகளிர் திட்டம்,

மிருசுவிலைச் சேர்ந்த

அமரர்

# சரவணை தாமோதரம்பிள்ளை

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் திருவடிக்கு
## எங்கள் காணிக்கை....

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் இருப்பிடமாய்
கருணையின் புகலிடமாய்
அனைவரையும் அரவணைக்கும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு
இவ் வையத்தின் வாழ்க்கையை
இனிதே முடித்துக் கொண்டு
வானுலகில் வாழ்வாங்கு வாழவே
எமை விட்டுப் பிரிந்து சென்ற
எங்கள் இதயக் கோயிலின்
பாதார விந்தங்களுக்கு
இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.


**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணில்
05.02.1940

விண்ணில்
02.03.2011

# அமரர் சரவணை தாமோதரம்பிள்ளை அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி மாசிபதினெட்டாம் நாள்
ஆனதொரு அபரபக்க திரயோதசி திதியதனில்
நற்றவத்தான் தாமோதரம்பிள்ளை நானிலத்தை
விட்டகன்று முருகனடி சேர்ந்தநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

**சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்**
**சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே**
**வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்**
**பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.**

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் உயர்திரு. சரவணை தாமோதரம்பிள்ளை அவர்களின்

# வாழ்க்கைச்சரிதம்

இந்துசமுத்திரத்தின் நித்திலம் என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் வடபால் அமைந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இராமநாதன் பாரம்பரியத்தில் சைவமணங் கமழும் உளம் செழிக்க வளம் கொழிக்கும் உசன் கிராமத்தில் வாழ்ந்து வந்த உயர்திரு. சரவணை முத்துப்பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த மகனாக திரு. தாமோதரம்பிள்ளை அவர்கள் 05-02-1940-ல் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியினை உசன் சைவ வித்தியாசாலை என அக்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கற்றார். பின் இடைநிலைக் கல்வியாக தொழிற் கல்வியைத் தெரிவு செய்து கிளிநொச்சி விவசாயக் கல்லூரியில் பயின்றார். பின் தொழில் தேடி மலையகம் சென்ற அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் கண்டி மாவட்டத்தில் கம்பளை புசல்லாவை தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியராக பணியினை ஆரம்பித்தார். பின்னர் கொழும்பு சென்று SHARAZ என்ற தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தார். இந்நிலையில் புத்தளம் போக்குவரத்து சபையில் உள்ள வெற்றிடத்தை அறிந்து அப்பதவிக்கு விண்ணப்பித்து இலங்கைப் போக்குவரத்துசபை உத்தியோகத்தராக சில காலம் பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் நீண்ட நாட்கள் வெளியூரில் கடமைபுரிந்ததால் உசனில் உள்ள பெற்றோரையும் குடும்பத்தில் மூத்த பிள்ளை என்ற வகையில் குடும்பத்தை கவனிக்க வேண்டிய தேவை எழுந்ததால் உசனில் இருந்து 13km தூரத்தில் உள்ள பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தின் சோறன்பற்று பிரதேச உபஅஞ்சல் அலுவலகத்தின் பதில் உபதபால் அதிபராக கடமையைப் பொறுப் பேற்றுக் கொண்டார். பின் விடத்தற்பளை உபதபாலகத்தில் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடத்தை நிரப்பு முகமாக 11-02-1976-ல் நிரந்தர நியமனம் பெற்று விடத்தற்பளை உபதபாலதிபராக கடமையைப் பொறுப் பேற்றார். இந்நிலையில் இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி யோகாம்பாள் தம்பதியினரின் அருமை மகள் செல்வராணி என்பவரை பெற்றோர் நிச்சயித்ததின் பேரில் திருமணம் புரிந்தார். இக்காலப் பகுதியில் இவரது மனைவி செல்வராணி அவர்களுக்கு எழுதுமட்டு வாழ் வடக்கில் உள்ள படித்த மளிர் குடியேற்றத் திட்டத்தில் உள்ள அப்போதைய அரசாங்கத்தால் நிலம் உடமையாக கொடுக்கப்பட்ட தன் பேரில் அங்கு சென்று குடியேறி விவசாய முயற்சிகளை மேற்கொண்டு தன் சொந்த முயற்சியால் வீடு ஒன்றை அமைத்து அங்கு வாழ்ந்து வந்தனர். இக்காலப் பகுதியில் இவருக்கு ஐங்கரன் என்ற ஆண்மகனும், தாரணி என்ற பெண்பிள்ளையும் பிறந்தனர். அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு சகோதரர்களாக பராசக்தி, செல்லத்துரை, பத்மாவதி, செல்வராசா, பூபதி, ஜெயராசா ஆகியோர் சகோதரர்களாக வாய்த்தனர். இச் சகோதரர்களை இவர் மூத்த சகோதரராய் விளங்கி அன்பால் வழிநடத்தினார். சகோதரர்களும் இவரில் அன்புடன் இருந்தார். இவர்களை அவதானிக்கும் ஊர் மக்கள் தமக்குள் இவர்களை பஞ்சபாண்டவர்களாகவும் இராமலட் சுமணராகவும் ஒப்பிட்டு மகிழ்ந்தனர்.

காலச்சக்கரம் இவ்வாறாக நகர்ந்துவரும் வேளையிலே மூத்தமகன் ஐங்கரன் க.பொ.த. உயர்தரக் கல்வியை நிறைவு செய்த நிலையில் எழுதுநர் சேவைப் பரீட்சையிற் சித்திபெற்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக 2000-ம் ஆண்டில் பணியிலிணைந்த வருடத்திலேயே அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களும் விடத்தற்பளை உபாதபாலதிபர் பதவியிலிருந்து இளைப்பாறினார். இவ்வண்ணமே இளையமகள் தாரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் க.பொ.த. உயர்தரச்சித்தியின் பின் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிபெற்று 3 வருட பயிற்சியின்பின் கிளி/பளை மத்திய கல்லூரியிலே ஆசிரிய நியமனம் பெற்று கடமையேற்றார்.

இந்நிலையில் மூத்தமகன் ஐங்கரன் அல்லாரையைச் சேர்ந்த தங்கராசா நாகபூரணம் தம்பதியரின் மகள் ஜெயபூரணியை (சாவகச்சேரி பிரதேச செயலக பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்) தன் இல்லாளாக உவந்தேற்க இளையமகள் தாரணி படித்த மகளிர் திட்டம் வடக்கு எழுதுமட்டுவாழைச் சேர்ந்த நடராசா சறோஜாதேவி தம்பதியரின் மகன் அச்சுதனை (நர்த்தகி பான்சி அன் ஸ்ரேசனறி உரிமையாளர்) தன் வாழ்க்கைத் துணைவராக விருப்புடன் தெரிவுசெய்ய மனமுவந்தேற்று திருமண வைபவங்களை சிறப்புற நடத்தி வைத்தார். பிள்ளைகளின் வழி பேரப்பிள்ளைகளாக மூத்த மகன் ஐங்கரனுக்கு அபிநவன் என்ற ஆண் பிள்ளையும் இளையமகள் தாரணிக்கு நர்த்தகி, யக்சிகன், என இருமழலைச் செல்வங்களுமாக மூன்று பேரப்பிள்ளைகளைக் கண்டு இன்புற்றார்.

சமகாலத்திலே அன்னார் தன்னை சமூகத்துக்கு பயனுடைய வனாக ஆக்கிக் கொள்ளும் வகையில் சமூக சேவையில் பல பொறுப்புக்களையும், பதவிகளையும் அலங்கரித்துள்ளார். இவ் வகையில் மிருசுவில் பிரதேச சமாதானசபை (இணக்கசபை) தலைவராக 1974-ம் ஆண்டு இலங்கை அரசினால் கௌரவப் பொறுப்பு ஒன்று வழங்கப்பட்டது. அத்துடன் பிறந்த ஊரான உசன் கிராமத்தின் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலைய மும், இந்து இளைஞர் மன்றம் என்ற மூன்று பொது அமைப்புக் களதும் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக, இளைஞராக இருந்த போதே திறம்பட செயற்பட்ட அனுபவம், பொறுப்புக்களை ஏற்று செயற்பட அவருக்கு இயல்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்து சக்தியாக இருந்தது. அத்துடன் நில்லாது படித்த மகளிர் திட்ட ஐக்கிய நாணய சங்கத்தலைவர், விநாயகர் சனசமூக நிலையத் தலைவர், விளையாட்டுக்கழக போசகர், மருதங்குளம் விநாயகர் ஆலய 8-ம் திருவிழாக் குழுத்தலைவர் போன்ற பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டவர். இப்பணிகளிற்கு சிகரம் வைத்தாற் போல் இவர் தேடிப் போகாமலே அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள் 2002-ம் ஆண்டில் இவருக்கு தமது சிபார்சின் மூலம் சமூகத்தில் இவரை அகில இலங்கை சமாதான நீதவானாக செயற்பட வழி செய்தனர்.

இவ்வாறு உசன் முருகன் அருளால் இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வந்த அமரர் தாமோதரம்பிள்ளை அவர்கள் கடந்த 2009 டிசம்பர் மாத முற்பகுதியில் திடீரென 5 நாட்கள் கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட ஒரு மாதகாலம் யாழ் போதனா மருத்துவமனையிலும் பின்னர் கொழும்பு நவலோகா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்ற போதிலும் அவரது நோய் இன்னதென வைத்தியர்களால் சரியாக நிர்ணயிக்க முடியாத நிலையில் கடந்த 02-03-2011 சிவராத்திரி தினத்தன்று பிள்ளைகள் கலங்கி நிற்க யாழ் போதனா வைத்தியசாலையிலே 9-40 மணிக்கு சிவன் கழல்களை அடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சிவகதிபெற்று சாந்தி பெறுகவென பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சதந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடர் விட்டெழுந்த சூரியனே, பிரகாசித்த வேளையில் ஏன் ஐயா மறைந்தீர்கள்

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திலும், உசன் பிரதேசத்திலும் ஒளிவீசிய "கோமேதகம்' என்ற இரத்தினம் நீங்கள் ஐயா. பாமர மக்களுக்கு பல்லாண்டு காலம் பணிசெய்ய முதலில் தபாலதிபராகவும், அதனை தொடர்ந்து சமாதான நீதிபதியாகவும் எங்களுக்காக வந்தீர்கள். இல்லை இறைவனால் நியமிக்கப்பட்டீர்கள். பெருமையுடன் தங்களை வரவேற்ற கணப் பொழுதில் எங்களைக் கலங்க வைத்து காணாமல் போனீர்களே. நாங்கள் உங்களுக்கு என்ன தவறு செய்தோம் ஐயா?

நீங்கள் விரைவில் செல்ல உங்களை ஆயத்தப் படுத்திய தாலோ என்னவோ ஐங்கரனாகவும், தாரணியாகவும் இரண்டு கண்மணிகளைத் தந்தீர்கள். சொல்லொணா இன்னல் மத்தியிலும் கல்விமான்களாக தரணியில் திகளவைத்து, சீரும் சிறப்புமாக ஊரும் உலகும் போற்றும் மேதாவிகளாக தங்கள் உன்னத கடமைகளைச் செய்ய அதை நான் பார்த்து மகிழ வேண்டும் என நினைத்த வேளையில், கண்ணிமைக்கும் நேரமதில் காரிருளில் ஓடி மறைந்தீர்கள். உங்கள் பிள்ளைகள் தான் செய்த தவறு என்ன ஐயா?

எங்கள் நாடும், மக்களும் தங்கள் பணி தொடரும் என்று நம்பினோம். ஏனையா நட்டாற்றில் எம்மை விட்டுச் சென்றீர்கள். தங்கள் ஆருயிர் நண்பன் என்தந்தை அவரும் அமரராகிவிட்டார். அவர் தீர்க்க தரிசனமாக சொன்ன பாடலின் ஓரிரு வரிகள் "பன்றி மான் மரைகள் மேய்ந்த காட்டில் பளிங்கு மா மண்டபங்கள் தோன்றக் கண்டேன்'' இப் பொய்யாமொழியை கையாலாகும் என்ற திடத்துடன் கவர்ச்சியானதொரு மாளிகையை கட்டினீர்கள். அதிலே தாங்கள் கோலங்கள் படைத்த வேளை காவலிருந்த காலன் கவர்ந்து சென்றானே ஐயா! இது சரியா? ஐயா, ஐதீக வரலாற்றில் சிவபெருமான் சிறப்பைக்காட்ட ஓர் உமாதேவியையும் சிருஷ்டித்த இறைவன் தங்களுக்கும் தந்தார் ஒரு ராணியை கட்டிளங்குமாரனாம் தாமோதரனுக்கு ஓர் அழகிய இளமை மாறாத அழகியாம் செல்வராணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவந்தளித்தான் இறைவன். பலகாலம் பாரினில் வாழவேண்டிய ஐயா நீங்கள் சிலகாலத்தில் சரித்திரம் பல படைத்த பெருமை ராணிக்குத்தான் தந்தாய் ஐயா.

இக்கட்டான இவ்வுலகில் திக்கெட்டும் வித்தகனாக வழிசமைத்தது உங்கள் ராணி தான் ஐயா. ஏன் ஐயா உங்கள் மனைவியை பரிதவிக்க விட்டீர்கள். தங்களதும், தங்கள் மனைவியினதும் ஒய்யாரமான தோற்றம் என்னைப்போல் எத்தனை கண்களில் பட்டிருப்பீர்கள். அந்த அழகான "போட்டோ"

இன்னல்கள் என்னை இறுக்கிப்பிடிக்கிறது. கண்ணில் தெரிந்த தூரத்தில் ஐயா இருக்கிறீர்கள் என்று ஓடி வந்த மக்கள் அன்புக்கரம் நீட்டி, ஆதரவளித்து அனுப்பினீர்களே, ஐயா இனி யாரிடம் நாங்கள் வருவது?

வானத்தில் நின்று ஒளி வீசும் தாரகையாக, தானத்தில் தவழும் வெண்டாமரையாக, எங்கள் விநாயகர் சனசமூக நிலைய கலங்கரை விளக்காக ஐயாவை துலங்க வைத்த வண்ணமே இன்றும் இருக்கிறது எங்கள் சனசமூக நிலையம் உயிருடன் இருந்திருந்தால் இன்றும் கண்ணீர் வற்றாது ஐயா.

ஐயா துர்க்கை அம்மன் தெய்வமானதால் மௌனக்கண்ணீர் வடிக்கின்றாள், தாங்கள் உடல் நலத்தையும் கருதாது ஆலய பணிகளில் ஈடுபட்ட தன்மையும், அர்பணித்த நேரத்தையும் அம்பாள் மானிடராக இருந்தால் கண்ணீர் விட்டு அழுதிருப்பாள்.

எங்கள் மக்களின் இன்ப துன்பங்களில் நேரகாலம் பார்க்காது உங்களை அர்ப்பணித்த தன்மையை பார்த்து பெருமிதப்படாத நாளில்லை. ஐயா இன்று இவற்றையெல்லாம் செய்ய நீங்கள் இல்லை என்று நினைத்து நினைத்துக் கலங்குகின்றேன்.

சிலர் தங்களை முற்றத்து முல்லையென நினைத்தார்கள். ஆனால் சுற்றம் சூழ மணம் வீசும் றோஜாவென என்றோ நான் நினைத்தேன். என்போன்றவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும் உங்களைத் தெரியும் ஐயா. ஆற்றல் மிக்கவர்களுக்கு ஆசனத்தில் இடம் கொடுக்க மறுக்கிறது உலகம். ஐயா, தங்களை போன்ற நாலும் தெரிந்த நல்லாசான், தனக்கும் தேவை என்று தான் இறைவன் தனதாக்கிவிட்டார்.

ஐயா உங்களை சந்தோஷப்படுத்தவென்று சிந்தித்தவர்களில் உங்கள் மகன் இல்லை உங்கள் மருமகன் அச்சுதன். அவரது அழகுசாதன மாளிகையில் மஞ்சவனப் பிள்ளையார் போல் பொட்டும் பிறையுமாக நிறைந்திருப்பீர்கள், பல சந்தர்ப்பங்களில் பார்த்தேன். மகிழ்ந்தேன். அண்ணன் சந்தோஷமாக இருக்க வேண்டும், மைத்துனன் நிறைந்த வாழ்க்கை வாழவேண்டும் என்று சகோதரர் களும், மைத்துனர்களும், மருமக்களும் முழு முயற்சி எடுத்தும் கடைசியில் கண்கலங்கத்தான் வைத்தீர்கள்.

பேரப்பிள்ளைகளுக்கு குழந்தையாகவும், மரு மக்களுக்கு தந்தையாகவும், மக்களுக்கு நண்பனாகவும் தங்கள் "கிண்கிணி" நாதம் குரலில் "தாரணி தண்ணி கொண்டு வா" என்று கூறும்போது கட்டளை கட்டுக் கோப்பாக தொனிக்கும், நான் பார்த்து என்மட்டில் சந்தோஷப்பட்ட சந்தர்ப்பம் பலவுண்டு. எனது மனைவி சொல்லுவாள் "ஐயா அவர்கள் பேரப்பிள்ளைகளுடன் பழகுவதைப் பாருங்கோ, இப்படி எப்ப நீங்கள் பேரப்பிள்ளைகளை தூக்கினீர்கள்" இது எல்லாம் ஐயாவை என்றும் சிந்திக்க வைக்கும் சிந்தனைச் சிதறல்கள்.

ஐயா நீங்கள் எம்மையெல்லாம் விட்டுப் போனீர்களே. இச் செய்திகேட்டு பதறிய மக்கள் வெள்ளம் கதறிய கண்ணீருடன் தாங்கள் இறுதி யாத்திரையில் கலந்து இருந்தமை இன்றும் என் கண்ணில் நிழலாக நிற்கின்றது.

படித்த மகளிர் திட்டம்
**மிருசுவில்.**

**ஞா. இராஜயோகம்**
**மனைவி, பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மைத்துனன் கணபதிப்பிள்ளை
# சிவபாலனின் கலங்கிடும்
# கண்ணீர்க் காணிக்கை.

அத்தான்! நீ எனக்கு ஆசை மாமா பெற்ற மகன்
முத்தாம் நீ எமக்கு முத்து மாமி பெற்ற மகன்
சொத்தாம் நீ எமக்கு எம் சொந்தத்தில் பெருமகன்
வித்தாகி வாராயோ விண்ணிருந்து எம்மிடமே!

"சிவபாலன்" என்றென்னைச் சிரிப்புடனே நீ அழைக்க
நவமாக நான் குளிர்வேன் நெஞ்சமோதான் களிக்க
தவமாக நான் நினைத்தேன் தக்கபடி நீ திளைக்க
சவமாகப் போயினையோ! சடுதியாய் நீ இன்று!

பிறந்தவர் இறப்பது இவ்வுலகில் இயல்பு அன்றோ!
இறந்தவர் பிறப்பதுவும் இம்மண்ணில் இயற்கையன்றோ!
சிறந்தவர்கள் சித்தர்கள் சாவதும் தான் நியதியன்றோ!
மறந்திதை நாமினியும் மாய்ந்தழுதல் வீண் அன்றோ!

விண்ணுலகு விரைந்திட்ட எங்கள் அன்பு அத்தான்!
மண்ணுலகை மறைந்துபோன மதிப்புடை எங்கள் அத்தான்
கண்ணுக்கு நிகரான கருணைமிகு எம் அத்தான்
விண்ணுலகில் சாந்திபெறும்! வீரமுடன் வாழ்ந்திடுவீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் கல்வித்துறை சம்பந்தமாக சில தரவுகள்

- 1940இல் மத்திய மகா வித்தியாலயங்கள் உருவாக்கப் பட்டன.
- 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கபட்டது.
- 1943-ம் ஆண்டு 26ம் இலக்க அறிக்கைப் பிரகாரம் C.W.W. கன்னங்கர அவர்களால் இலவசக்கல்வி ஆலோசனை வழங்கப்பட்டது.
- 1956இல் சுதேசமொழி கல்விமொழியாக மாற்றப்பட்டது.
- 1961இல் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதோடு தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.
- 1971இல் கல்விச்சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தொழில் முன்னிலை பாடமானது ஆரம்பிக்கப்பட்டது.
- 1974 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவானது.
- 1978இல் உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டு தொழில் உயர்கல்வி ஆரம்பிக்கபட்டது.
- 1980இல் இலவச பாடநூல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1980 கல்விச் சீர்திருத்தக் கொள்கை வெளியானது.
- 1980 இல் திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
- 1985 ஆம் ஆண்டு 28ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்டது.
- 1986இல் கிழக்குப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
- 1987இல் தேசிய பாடசாலைகள் உருவாக்கப்பட்டது.
- 1989 இலவச தேசிய உணவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1990 இலவச மதிய உணவு முத்திரை மாணவருக்கு வழங்கப்பட்டது.
- 1994 இலங்கை ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டது.
- 1991 தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்டது
- 1993 இலவச சீருடை விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1998 புதிய கல்விச் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2000-ம் ஆண்டிலிருந்து க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு 3 பாடங்களுக்கு மாணவர் முதன் முறையாக தோற்றினர்.
- 1999 இல் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை (SBA) ஆரம்பித்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2001 இல் பாடசாலைக் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது
- 2002 இல் SBA புள்ளி O/L பெறுபேற்றுடன் வெளியிடப் பட்டது
- 2005 கணிப்பீட்டுப் புள்ளிகளை உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளுடன் இணைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 2006 இல் க. பொ. த. சாதாரண தரத்துக்கு வரலாறு, குடியியல், புவியியல் போன்ற பாடங்கள் அறிமுகமாயின.
- 2009இல் இலங்கையில் 10447 பாடசாலைகள் இயங்கின அவற்றில் 334 பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் ஆகும்.
- இலங்கையில் 2009இல் 15 பல்கலைக்கழகங்கள் இயங்கின.
- 2009 இல் இலங்கையில் 4023000 மாணவர்கள் பாடசாலைகளில் கல்வி கற்று வந்தனர்.
- இலங்கையில் 2010இல் மாணவர் ஆசிரியர் விகிதம் 19:1ஆகும்.
- இலங்கையில் நிலப்பிரப்பில் 6.5km$^2$ இற்கு ஒரு பாடசாலை உள்ளது.

## இலங்கை பற்றிய அண்மைக்கால புள்ளி விபரத் தரவுகள் (2009)

- ஆண்டுச்சராசரி மழைவீழ்ச்சி 1711*l*mm
- குடித்தொகை 20 450 000
- குடித்தொகை வளர்ச்சி வீதம் 1.1%
- குடித்தொகை அடர்த்தி சதுரகிலோமீற்றருக்கு 326
- தொழில் அற்றோர் வீதம் 5.8%
- ஆயுட்காலம் 77.9 ஆண்டுகள்
- சராசரி கல்வி வீதம் 91.8%

  ஆண்கள் 92.3%

  பெண்கள் 90.0%
- சராசரி குடும்ப வருமானம் 26286
- தலைக்குரிய வறுமை சுட்டெண் 15.2
- சுபீட்ச சுட்டெண் 52.7
- மனித அபிவிருத்தி சுட்டி 0.759
- AB தரத்திலுள்ள வீதிகளின் நீளம் 11919km
- மின்வலுவை பெறுவோர் சதவீதம் 86.9%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❀ வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 22
❀ உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 11
❀ வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 11
❀ வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் 15.2% (2007இல்)
❀ ஒரு வைத்தியருக்கான நோயாளிகளின் எண்ணிக்கை 1500

## கணணியோடு தொடர்புபட்ட தகவல்கள்

❀ சீனர்கள் முதன்முதல் கணனியுகத்திற்கு வித்திட்டார்கள்
❀ சாள்ஸ்பபேஜ் என்பவர் கணனியின் தந்தை என கூறப்படுகிறார்
❀ வினிட்சொப் என்பவர் இணையத்தின் தந்தை என கூறப்படுகிறார்.
❀ 1945இல் முதன் முதல் தானியங்கி கணனி கண்டு பிடிக்கப்பட்டது
❀ "மல்ரிமீடியா" (பல்லூடகம்) என்பது விடியோ, தொலைபேசி போன்றவற்றை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தகவல் களை பரிமாறிக் கொள்ளும் முறையாகும்.
❀ W.W.W. (World wide web) என்பது 1993இல் உருவாக்கப் பட்டது.
❀ இணையம் (Net work) என்பது பல்லாயிரக்கணக்கான கணினிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஒரு வலைப்பின்னல் இன்ரநெற் ஆகும். சர்வதேச கணினிகளின் கூட்டமைப்பு எனவும் இன்ரநெற்றை அழைக்கலாம். International Net work என்பதன் அழுத்தமே Internet என அழைக்கப்படுகிறது.
❀ கணினியில் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை அழிக்கும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ள ஒரு Programme கணினி வைரஸ் எனப்படும்.
❀ web site என்பவை இணையத்திற்கு தகவல்களை அனுப்பும் மையங்கள் ஆகும். அதாவது இன்ரநெற்றில் பரவிக்கிடக்கின்ற பல இலட்சக்கணக்கான கணினிக் கோவைகளின் வலைமைப்பாகும்.
❀ தற்போது உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி பிரபல்யம் பெற்றுள்ள இணையத்தளம் விக்கிலீக்ஸ் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல் பற்றிய விந்தை மிகு தகவல்கள்


- மனித உடலில் இரத்தக்குழாய்கள் வழியே இரத்தம் ஓடும்தூரம் 99776.6km ஆகும்.
- மனித மூளை சராசரியாக 1360gram நிறை உடையது. இது 200 டிரில்லியன் செய்தி அணுக்களை சேகரித்து வைக்கக்கூடியது (1 டிரில்யன் = $100x10^{18}$ ஆகும்)
- மனித உடலில் உள்ள இரத்தக்குழாய்களின் மொத்த நீளம் 96000km ஆகும்.
- வளர்ச்சியடைந்த மனிதனின் சுவாசப்பைகளின் மொத்த உள்மேற்பரப்பு $93m^2$ ஆகும்.
- மனித உடலில் கல்லீரல் தான் 1000க்கும் அதிகமான பணிகளை மேற்கொள்வதோடு இவ் அமைப்பே தன்னை மீண்டும் புதுப்பித்துக் கொள்ளும் திறனுடையதுமாகும்.
- மனிதனின் உணவுக்குழாயின் நீளம் 9.14m ஆகும்.
- மனித உடலில் 206 என்புகள் உள்ளன. இவற்றில் மிகச்சிறியது காது என்பாகும்.
- மனிதன் சிரிக்கும்போது 17 தசைகளும் சாப்பிடும்போது 42 தசைகள் இயங்கும்.
- ஒரு மனிதனில் சராசரி 125000 மயிர்கள் தலையில் மட்டும் முளைக்கும்.
- மனிதனை மூடியுள்ள தோலின் சராசரி எடை 12.72kg ஆகும்.
- மனிதனின் நாக்கு 500 விதமான சுவைகளை உணரும் திறன் கொண்டது. மூக்கு 2000 முதல் 4000 வரையான வெவ்வேறு மாற்றங்களை உணரக் கூடியது.
- மனிதக் கண்கள் 10000 நிறங்களை பகுத்தறியும் திறன் கொண்டவை.
- மனிதனில் 1 நாளுக்கு சராசரி 2*l* ஐதரோகுளோரிக்கமிலம் சமிபாட்டுத் தொகுதியில் சுரக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 | | 02 |
| 12 | | 03 |
| 1940 | | 2011 |



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி தாரணி அச்சுதன் அவர்களின் அன்புத்தந்தை

## அமரர்
## சரவணை தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு
அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தினை கண்ணீர் அஞ்சலிகளாக
காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பண்பின் சிகரமாய் பாசத்தின் குலவிளக்காய்**
**அன்பின் திருவுருவமாய் அமைதியின் உறைவிடமாய்**
**இல்லற வாழ்வில் அகமகிழ்ந்து இருந்தீரே!**
**உங்கள் மறைவு எங்கள் இதயத்தில்**
**ஏக்கத்தைத் தந்ததய்யா! தந்ததய்யா!**

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

கிளி/பளை மத்திய கல்லூரி
பளை.

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

| வையகம் | | வானகம் |
|---|---|---|
| 1940 |  | 2011 |
| 02 | | 03 |
| 05 | | 03 |

மிருசுவில் வடக்கைச் சேர்ந்தவரும் எமது அலுவலக உத்தியோகத்தரான **திரு. த. ஐங்கரன்** அவர்களின் அன்புத் தந்தையாருமாகிய

## அமரர்

## சரவணை தாமோதரம்பிள்ளை அவர்கள்

சொந்தங்கள் சிறகடித்த சோலையிலே
சோகத்தை நிரப்பிச் சென்றதும் ஏனோ?...
நீங்கள் தேடிய சொந்தங்கள் எல்லாம்
உங்களைத் தேடி வாடுதைய்யா
உங்களை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு
ஆறுதல் தான் இனி யாரோ?...

அன்னாரின் மறைவினால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**

பிரதேச செயலகம், **கணக்காளரும் உத்தியோகத்தர்களும்.**
**சாவகச்சேரி.** **(நிதிக்கிளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- கந்தசாமி + யோகம்மா
  - **செல்வராணி** + **தாமோதரம்பிள்ளை**
- சரவணை + முத்துப்பிள்ளை
  - பராசக்தி + நல்லதம்பி
    - சிற்றுபேசன்
    - சிற்சொரூபன்
    - சகீலா
  - செல்லத்துரை + சாந்தலக்குமி
    - ஜசிதலா
    - ஜதிகேசன்
  - பத்மாவதி + சின்னராசா
    - சோபனா
    - சோபினா
    - எபநேசன்
  - செல்வராசா + புகழ்வதி
    - சஞ்ஜயன்
    - சஞ்ஜிகா
    - சஞ்சுதா
  - பூபதி + அருட்பிரகாசம்
    - சுஜீவன்
    - சுஜானி
    - சுஜானன்
  - ஜெயராசா + மல்லிகாதேவி (அமரர்)
    - இந்துஜா
  - **தாமோதரம்பிள்ளை** + **செல்வராணி**

**செல்வராணி + தாமோதரம்பிள்ளை**

- ஐங்கரன் + ஜெயபூரணி
  - அபிநவன்
- தாரணி + அச்சுதன்
  - நர்த்தகி
  - ஜக்சிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்....

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எங்கள் நல்வாழ்விற்காய் தன்னையே அர்ப்பணித்து எங்களை ஆளாக்கிய எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சரவணை தாமோதரம்பிள்ளை அவர்கள் சிவபதம் எய்திய செய்திகேட்டு உடன் ஓடிவந்து உதவி புரிந்தவர்களுக்கும், அமரர் அவர்கள் நோயுற்று யாழ் போதனா வைத்தியசாலையிலும், கொழும்பு நவலோகா மருத்துவமனையிலும் அனுமதிக்கப் பட்டிருந்தபோது அவருக்குச் சிறந்த முறையில் சிகிச்சையளித்த மருத்துவர்கள், மற்றும் ஊழியர் கட்கும் இறுதிச் சடங்குகளின் போது கலந்து கொண்டவர்கட்கும், நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்கட்கும், உள்நாடு, வெளிநாடு களிலிருந்து இலத்திரனியல் ஊடகங்களில் அனு தாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதர்பம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர், அயலவர் கட்கும், இன்று நடைபெறும் சபிண்டீகரண கிரியை களில் கலந்துகொண்ட அனைவர்க்கும். கிரியைகளை விதிப்படி நிறைவேற்றிய சிவாச்சாரியர்கட்கும் இம் மலரை அச்சிட்டு வழங்கிய திருக்கணித பதிப்பகத் தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


படித்த மகளிர் திட்டம்
எழுதுமட்டுவாழ் வடக்கு,
**எழுதுமட்டுவாழ்.**
01-04-2011

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org